<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

2. வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகளில் மத்திய அரசுக்கு எவ்வித பங்கும் இல்லை என்று மத்திய இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

3. மேற்கு வங்கம், சிக்கிம், மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இன்று அதிகன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. அமெரிக்காவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ராம்குமார் ராமநாதன் இணை பட்டம் வென்றது.

<<<<>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய நிலக்கரித்த துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ள யாச்சாரமில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விவசாயிகளிடையே உரையாற்றிய அவர், இத்திட்டம் விவசாயிகளின் உரச் செலவுகளுக்கான சுமையைக் குறைத்துள்ளது என்று கூறினார்.

விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு உரப் பையிலும் அவற்றின் விலைகள், மானியத் தொகை போன்ற விபரங்கள் அச்சிடப்பட்டு வருவதாக திரு கிஷன் ரெட்டி கூறினார்.

<<<<>>>>

பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகிறது என்று மத்திய அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் கூறினார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், இது தேர்தல் ஆணையத்தின் வழக்கமான பணி என்று தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகளில் மத்திய அரசுக்கு எவ்வித பங்கும் இல்லை என்று திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்தார்.

<<<<>>>>

சுயசார்பு இந்தியா, வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் உற்பத்திக்கான இந்தியா போன்ற திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளே ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளது என்று மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற இந்திய உற்பத்தி கண்காட்சியின் தொடக்கநாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள், 140 கோடி மக்களின் ஒற்றுமையுணர்வு ஆகியவை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் பாகிஸ்தானுக்கு உரிய பதிலடி கொடுப்பதை உறுதி செய்துள்ளன என்று தெரிவித்தார்.

மத்திய அரசின் கொள்கைகள் காரணமாக, ஆயுதப்படைகளின் மூன்று பிரிவுகளும் சுயசார்பு இந்தியா திட்டத்தால் பயனடைந்துள்ளதாக திரு சஞ்சய் சேத் கூறினார்.

<<<<>>>>

விவசாயிகளின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு மத்திய அரசு பல்வேறுத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் கரீம்நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளின் மேம்பாட்டிற்காக 71 லட்சம் கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இம்மாநிலத்தின் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 13 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை வரவு வைக்கப்பட்டுள்ளதாக திரு சஞ்சய் குமார் தெரிவித்தார்.

<<<<>>>>

சமூக-பொருளாதார சமத்துவம் மற்றும் நீதி குறித்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சிந்தனைகள் எதிகாலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக

திகழ்கிறது என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பூஷன் ராமகிருஷ்ண கவாய் தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் கல்லூரியின் வைர விழா நிகழ்ச்சியில் கலந்துமோக்டு பேசிய அவர், சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர் தனது வாழ்நாளை அர்பணித்துள்ளதாக கூறினார்.

பெண்களின் முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும், சமூக முன்னேற்றத்திற்கான அளவுகோல் என்று அவர் கூறினார்.

மகளிருக்கு அதிகாரமளித்தல் டாக்டர் அம்பேத்கருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி என்றும், அவரது சிந்தனைகள் குறித்து அனைவரும் அறிந்துகொள்ளச் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னாவிஸ், டாக்டர் அம்பேத்கர் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

<<<<>>>>

கடந்த பத்தாண்டுகளில் வடகிழக்கு மாநிலங்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டு வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் புதிய நீதிமன்ற மற்றும் அலுவலக வளாகத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்திற்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், அசாம் மாநில அமைச்சர் திரு ரஞ்சித் குமார் தாஸ், மத்திய நிர்வாக தீர்ப்பாயத் தலைவர் நீதிபதி ஆர்.கே. மோரே, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

<<<<>>>>

சுதந்திர தின கொண்டாட்டங்களையொட்டி, தலைநகர் டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வரும் 16-ம் தேதி வரை, தில்லியை சுற்றியுள்ள பகுதிகளில் விமானங்கள் பறக்க தடை விதித்துள்ளது.

தடையை மீறிப் பறப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்றும் தில்லி காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசு பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் தங்களுக்கு பயனுள்ளதாக உள்ளது என்று திருவண்ணாலை மாவட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

மேற்கு வங்கம், சிக்கிம், மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இன்று அதிகன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, கேரளா மற்றும் பீகார் மாநிலங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்யும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், வடகிழக்கு ராஜஸ்தான், உத்தரகண்ட், கிழக்கு உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், அம்மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கடந்த 24 மணி நேரத்தில், கடந்த ஐம்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்குஅம்மாநிலத்தில் உள்ள உனா மாவட்டத்தில் 258 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. உனா நகரில் வீடுகள் மற்றும் கடைகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

இடைவிடாது பெய்து வரும் மழை காரணமாக, காங்க்ரா மாவட்டத்தில் உள்ள பாங் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், பஞ்சாபில் உள்ள காங்க்ரா மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழை, வெள்ளம், நிலச்சரிவு தொடர்பான சம்பவங்களில் இதுவரை 179 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 36 பேரைக் காணவில்லை என்றும் அம்மாநில அவசரகால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால், 400 - க்கும் மேற்பட்ட சாலைகளில் போக்குவரத்து தடைபட்டுள்ளன.

லாஹவுல்-ஸ்பிட்டி தவிர மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம், எச்சரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூர் நிர்வாகம் வழங்கியுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவிடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே,, அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால், கிழக்கு கமெங், பபும் பரே மற்றும் மேற்கு சியாங் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின், மொன்டானா மாநிலத்தின் அனகோண்டா பகுதியில் உள்ள மதுபானக் கூடத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்மேற்கு மொன்டானாவில் அமைந்துள்ள அனகோண்டா நகரத்தில் உள்ள தி ஆவ்ல் மதுபானக் கூடத்தில் நேற்று துப்பாக்கிச் சூடு நடந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபரைத் தேடும் பணி நடைபெற்று வருவதாகவும், அனகோண்டா சட்ட அமலாக்க மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமொிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ராம்குமாா் ராமநாதன் இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிாிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-4,6-4 தைவான் இணையை வென்றது.

--------------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் லக்கி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<The End>>>>